## ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் நிரந்தர தர்சனத்தின் அவசியம் - 3

ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் குளத்தில் முதன்முறையாக எழுந்தருளியது **பாதுகாப்புக்காக என்றும், மூர்த்தி பின்னம் என்றும் பல காரணங்கள்** கூறப்படுகின்றன. இவற்றில் படையெடுப்பு காலத்தில் தெய்வதிருமேனிகள் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட விஷயங்கள் பற்றிய பெரியோர்கள் பலர் காலம் காலமாக தரும் தகவல்கள்.

- நமது இந்திய சரித்திரத்தில் படையெடுப்பு காலத்தில் நமது கோயில்களில் பூஜையில் இருந்த தேவதாமூர்த்திகளை பாதுகாப்புக்காக பூமிக்கு அடியில் அல்லது குளம், கிணறு உள்ளே வைத்து பாதுகாத்து வந்துள்ளார்.

- உத்ஸவ மூர்த்திகளை வேறு ஊருக்கு அழைத்து சென்று பாதுகாப்பாக வைத்துள்ளார்கள் என்பது நமக்குத் கல்வெட்டு சான்றுகள், கோயில் ஓமுகு, பெருமாள் கோயில் ஒழுகு, ரங்கநாதர் உலா முதலான ப்ரமாணங்கள் மூலம் கிடைக்கிறது.

- படையெடுப்பு காலம் முடிந்த பிறகு இவ்வாறு பல இடங்களில் பாதுகாப்பாக இருந்த மூலவர் மற்றும் உத்ஸவ மூர்த்திகளை மீண்டும் அந்த அந்த திருக்கோயில்களில் எழுந்தருளி தரிசனம் செய்யும் சமயத்தில் பல கோயில்களில் புதிய அல்லது வேறு மூர்த்திகளை தற்காலிகமாக ஆராதனைகள் செய்வதும் வழக்கத்தில் வந்துள்ளது.

- இதற்கு உதாரணமாக இன்றும் ஸ்ரீ ரங்கநாயகி தாயார் சன்னதியில் **ஆதி ரங்கநாயகி தாயாரும், அந்த சமயத்தில் மாற்று தாயாராக ஆராதனத்தில் இருந்த தாயார்** என்று **இரண்டு தாயார்களை இன்றும் ஆராதனத்தில்** இருந்து நாம் தரிசனம் செய்கின்றேம். இதில் **ஒரு தாயாருக்கு "கலக கால தாயார்"** என்று ஸ்ரீரங்கத்தில் ஒரு அழைக்கும் வழக்கம் உண்டு.

- **ஸ்ரீரங்கம் நம்பெருமாள் தான் ஆதியில் இருந்தவர்** என்பதற்கு சான்று அளித்த ஸ்ரீரங்கம் பெருமாளின் வஸ்திரங்களை **தினமும் சுத்தம் செய்யும் கைங்கர்யம் செய்த சலவை**

**தொழிலாளி** குடும்பத்தினருக்கு "**ஈரக்கொல்லி**" என்ற சிறப்பு பெயருடன் உரிய மரியாதைகள் இன்று ஸ்ரீரங்கம் கோயிலில் வழங்கபடுகிறது.

- இதுபோல நமது காஞ்சிபுரம் திரு ஆதி அத்திகிரீ வரதர் கோயில் உத்ஸவரை பல்லாண்டுகளாக பாதுகாத்த **உடையார் பாளையம் ஜமீன் குடும்பத்தினருக்கு வரதர் கோயிலில் பல மரியாதைகள்** வழங்கப்பட்டுள்ளது.

- இதுபோல காஞ்சிபுரம் வரதர் கோயில் மூலவரான **ஸ்ரீ காஞ்சிபுரம் மஹாத்மியத்தின் படியும், ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அருளி செயல்படியும் அத்தி மரத்தினால் ஆன மூர்த்தி** படையெடுப்பு காலத்தில் பாதுகாப்பாக திருக்கோயில் வளாகத்தில் உள்ள **திருஅனந்த புஷ்கரணியில் வைக்கபட்டு இருந்தார்** என்று ஒரு கருத்தும் உள்ளது.

- படையெடுப்பு காலம் முடியும் சமயத்தில் **உடையார் பாளையம் ஜமீன் குடும்பத்தினர் வசம் இருந்த உத்ஸவ மூர்த்தி** மீண்டும் வரதர் திருக்கோயிலில் எழுந்தருளினார்.

- மரத்தினால் ஆன ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் குளத்தில் (நீரில்) மூழ்கி இருப்பதால் வலுவாக இருக்கமாட்டார் என்ற ஐயத்தின் காரணமாக காஞ்சிபுரம் அருகில் உள்ள **பழைய சீவரம் கோயிலில் அதுசமயம் முலவராக இருந்த பெருமாளை காஞ்சீ வரதர் கோயிலில் கோயிலில் மூலவராக ப்ரதிஷ்டை செய்யப்பட்டார்** என்று ஒரு கருத்தும் உள்ளது.

- **க**ாஞ்சிபுரம் வரதர் கோயில் உத்ஸவரை மீண்டும் கோயிலுக்கு வந்த விஷயத்திற்கு ப்ரமாணமாக நமது வரதர் கோயிலில் **பெரும்தேவித்தாயார் சன்னதியில் வடக்கு பகுதியில் உள்ள திருமுற்றத்தில்யிருக்கும் குத்துக்கல்லில் தெலுங்கு மொழியில் இருக்கும் கல்வெட்டு கூறுகின்றது.**

- இதற்கு நிகழ்வை ஒட்டி இன்றும் ஒவ்வொரு வருடமும் **பங்குனி உத்திரட்டாதி நட்சத்திரம் அன்று உடையார் பாளையம் ஜமீன் குடும்பத்தினர் மண்டகப்படி** உஸ்தவம் வரதர் கோயிலில் நடைபெற்று வருகிறது.

வைபவங்கள் உடைய இப்பெருமாளை ஏதோ ஒரு காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக அனந்தஸரஸில் ஆதி அத்திகிரீ வரதரை எழுந்தருள செய்துள்ளனர். இந்த

**அனந்தஸரஸில் பொதுமக்கள் நீராடுவார்கள், கால் சுத்தம் செய்வார்கள்.** அப்படிப்பட்ட அந்த **குளத்தினுள்** ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஆதாரமானவரும், ஆழ்வார்கள், ஆச்சார்யார்களால் கொண்டாடப்படும் **ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை பகவத் ஸ்ரீ ராமானுஜரின் 1000 வது** திருநட்சத்திரம் **, ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகர் 750வது** திருநட்சத்திரம் வைபவமாக கொண்டாடப்படும் இச்சமயத்தில் **மீண்டும் எழுந்தருள செய்வது** எங்களை போன்ற **பக்தர்களுக்கும், வைஷ்ணவ பாகவதோத்தமர்களுக்கும்** மிகுந்த **மனவருத்தத்தை ஏற்படுகிறது.**

மேலும் இந்த கோயில் ஸ்தல வரலாறு, கல்வெட்டு குறிப்புகள் படி இவரே ஆதி மூலவர். இப்படி பல வைபவங்கள் உடைய இவரை தரிசனம் செய்வது நாம் கண்களை பெற்ற பயன். **பிறவியிலேயே கண் பார்வை இழந்த ஒருவருக்கு கண் பார்வை கிடைத்து, அது மீண்டும் இழந்தால் அவருக்கு எப்படி இருக்குமே அப்படி உள்ளது பக்தர்கள் நிலை.**

**கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள்....நம் கூரத்தாழ்வாருக்கு கண்ணளித்து தன்னைக் காணச்செய்த இந்த பெருமாளை தரிசனம் செய்து கொண்டே இருப்பதுதானே நாம் கண்கள் பெற்ற பயன்.**

ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை தரிசனம் செய்ய உலகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் வருடம் முழுவதும் வருகை புரிவார்கள். அதனால் நமது காஞ்சீபுரம் மற்றும் வரதர் கோயில் மேலும் மேலும் புகழ் பெறும்.

நமது நாடும், நமது திருக்கோயிலும் பல பெருமைகள், நன்மைகள் அடைய ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் தர்சன வைபவம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற பக்தர்கள் **ப்ராத்தனைகளை திருக்கோயில் முக்கியத்தர்கள், திருக்கோயில் அர்ச்சகர்கள், அத்யாபக கோஷ்டியினர், ஸ்ரீ வைஷ்ணவ பெரியோர்கள், இந்து அறநிலையத்துறை, தமிழக அரசு என்று அனைவரும் ஒன்றுபட்டு செவி சாய்த்து பக்தர்களின் பிராத்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.**


ஸ்ரீ ரங்கம் மூலவர் இரட்டை
தாயார்

# அத்தி வரதன் வைபவம்

[ஸ்ரீ உ. வே. வித்வான் அய்யா கிருஷ்ண தாதாசார்யஸ்வாமி]

महिताभ्यां महत्सङ्घैः पुनानाभ्यामि मंजनम् ।
श्रीमद्भ्यां कृष्णताताचार्य पदत्राभ्यां नमोनमः ॥
यस्य प्रसादकलया बधिरः शृणोति पङ्गुः प्रधावति जवेन न च वक्तिमूकः ।
अन्धः प्रपश्यति सुतं लभते च वन्ध्या तं देव मेव वरदं शरणं गतोस्मि ॥

என்று பெரிய முதலியாரென்று நம் ஸம்ப்ரதாயத்திலே கொண்டாடப்படும் ஆளவந்தார் இராமானுசனை இத்தர்சநத்திற்கு ப்ரவர்த்தகராக்க வேணும் என்று ப்ரபத்தி பண்ணியருளின ச்லோகம் இதுவாயிருக்கும். இது தான்பேரருளாளன் விஷயமாய் நம்மாசார்ய கோஷ்டியில் முதல் அவதரித்த ச்லோக மென்பர். இந்த ச்லோகம் இப்போது அநந்தஸரஸ்ஸிலிருந்து மேலே எழுந்தருளி மண்டலாராதநம் கண்டருளும் அத்திவரதர் விஷயமாகவே அவதரித்திருக்கலாம் என்று ஊஹிக்க இடமுண்டு. நான்முகன் செய்த அச்வமேத யாகத்தில் ஆவிர்பவித்த பேரருளாளன் திவ்ய ஸௌந்தர்யத்துடன் ஸேவை சாதிக்க, நான்முகன் இப்பெருமாளை விபவாவதாரமாகவே எழுந்தருளி இருக்கச்செய்து பூர்ணாநுபவம் செய்துகொண்டு தன்னுடைய ஜீவிதகாலம் முழுவதையும் கழிக்கவேணும் என்று அபேக்ஷித்தார். அப்போது பெருமாள் ப்ரகிருதி மண்டலத்தில் இக்கார்யம் கைகூடாததாகையால், தன்னை அர்ச்சாரூபத்தில் எழுந்தருளப்பண்ணி ஸ்ரீ பாஞ்சராத்திரப்ரக்ரியையாலே ஆராதித்து மநோரதப்படி உத்ஸவாதிகளையும் பண்ணி அநுபவிக்கலாம் என்று நியமித்தார். அப்படியே ப்ருமனும் வெகுகாலம் செய்து, இவ்வேழைமலை நாயகனிடம் விடைபெற்று விண்ணுலகம் சென்றார். இப்படி நான்முகன் திருப்ரதிஷ்டை செய்த தினமே- சித்திரையீ அத்தநக்ஷத்திரம் அவதாரோத்ஸவ தினமாகக் கொண்டாடப்படுகிறது என்றது அனைவருக்கும் அறிந்த விஷயம். அப்போது பிருமதேவன்தான் ஏரியருளப்பண்ணின திருமேனி தாருமயமானது என்று ஸ்ரீ காஞ்சீ மாகாத்ம்ய புராணத்தில் தெளிவாய் காணப்படுகிறது. ஸ்ரீ தேசிகனும் இந்த திருமேனியை அநுஸந்திக்கும்போது "व्यपगतपरिकर्मवारवाणम्" என்று காப்பிடு திருமேனி அன்று என்றார். மூவ பேரம், திருமஞ்சனத்திருமேனி அதாவது சிலாமயம் இல்லாமல் போனால் அத்திருமேனியில் காப்பிடு திருமேனி சாத்துவதில்லை என்கிற அநுஷ்டானம் இருக்கிறது. ஸ்ரீ பாஞ்சராத்திர வைகாநஸாகமங்களில்

சுதை, சிலை, தாரு, இவைகளில் ஒன்றை மூல பேரத்திற்கு உபாதாநத்ரவ்யமாக சொல்லப்பட்டிருக்கிறது. கோயில் திருமலை பெருமாள் கோயில் என்று ப்ரசித்தமான இம் மூன்று திவ்யதேசங்களை முறையே மூல பேர வடிவமாக ஸேவிக்கப்படுகின்றன. கோயிலில் சுதையும் திருமலையில் சிலையும் ப்ரத்யக்ஷமாய் காணப்படும்போது பேரருளாளன் திருமேனி தாருமயமாக வேண்டியிருக்க திருமஞ்சனத்திருமேனியாய் காணப்படுவதற்கு காரணமில்லை. இங்கு அநாதிகாலமாய் தாருமயமான திருமேனியே இருந்தது என்று ஊஹிக்க இடமுண்டு.

அடியேனுக்கு இவ்விஷயத்தில், ப்ரும்மாண்ட புராணாந்தர்கதமான ஸ்ரீ காஞ்சீ மாஹாத்ம்ய பாராயணம் பண்ணும்போது ஸந்தேகம் உண்டாயிற்று. அப்போது அடியேனுக்கு பரமோத்தேச்ய பூதராய் எங்கள் வம்சத்தில் உதித்தவராய், எண்பது பிராயம் நிறைந்தவருமான தண்டரி தாதாசார்யஸ்வாமியிடம் விண்ணப்பம் செய்தேன். அவரும் பரம கிருபையோடே அடியேனை கையைப் பிடித்தழைத்துக் கொண்டு பேரருளாளன் துவஜஸ்தம்பத்தின் கீழ் பக்கம் இருக்கும் உதயபாது மண்டபத்தில் ஒரு சிலாசாஸநம் தெலுங்கு லிபியிலுள்ளதைக் காட்டி வாசிக்கச் சொன்னபோது அதில் பின் வருமாறு எழுதியிருந்தது.

“சாலீவாஹந சகாப்தம் 1703 ப்லவநாம ஸம்வத்ஸரம் ஆஷாட சுத்த தசமி சனிவாரம் அநந்த ஸரஸ்ஸின் நீரிரைத்தார்கள். அப்போது நீராழி மண்டபத்திற்கு தென்மேற்குக் கம்பத்திற்கு சரியாக அத்திகிரி வரதர் சயனித்திருக்கிறார்- என்று. இந்த ஈச்வர வருஷம் சாலீவாஹநம் 1860 ஆகையால் சிலாசாஸநம் செய்து 157 வருஷங்கள் ஆகின்றன. இத்தால் பெருமாள் தீர்த்தத்தில் எழுந்தருளின காலம் இன்னதென்று அறியக் கூடவில்லை. அதற்கு அந்த ஸ்வாமி சரித்திரம் ஒன்றை அருளிச் செய்தார். அதாகிறது—ஸ்ரீ தாத தேசிகன் காலத்திற்குப் பின்பு அவர் திருக்குமாரனான திருமலை தாததேசிகனும் வேங்கடவாத தாததேசிகனுமாய் பேரருளாளன் ஸ்ரீ கார்யம் நிர்வஹித்துக்கொண்டு போகும் காலத்திலே துருக்கரின் உபத்திரவத்தாலே பேரருளாளன் ஸன்னிதிக்கு என்ன வருகிறதோவென்று பயந்து ஒரு வருக்கும் தெரியாமல் பெரிய பெருமாளை திருவநந்த ஸரஸ்ஸிலே ஜலாதி வாஸப்படுத்தி, மற்ற திரு மூர்த்திகளையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, பெருமாளுக்குப் பாங்கான இடம் ஏதென்று தேடிக்கொண்டு, காடு பாய்ந்துபோகும்போது உடையார் பாளையம் ஜமீனுக்கருகே சென்று, இது மிக்க மஹாரண்யமாயிருக்கையால் இங்கு வருவார் யாருமில்லை என்று எண்ணி, அந்தக் காட்டிலேதானே கொஞ்சகாலம் திருவாராதநம் நடத்திக்கொண்டு மெல்லமெல்ல அத்

தேசத்துக் கடவரை அநுவர்த்தித்து இந்த விருத்தாந்தத்தைச் சொல்லி, பெருமாளுக்குத் திருவாராதநங்கள் துருக்கர் உபத்திரவம் வராதபடி நடத்தி வைக்க வேணுமென்ற பேக்ஷிக்க அவரும் இவர் வேண்டுகைக் கிசைந்து, தன்னுடைய திறமையை இவர்களுக்குக் காட்டி ப்ரத்யயம் செய்து வைத்து பெருமாளை தன்ஸ்வாதீநப் படுத்திக்கொண்டு, ஊரைச் சுற்றிக் காவலிட்டு, துருக்கர் ஒருவரும் ப்ரவேசிக்க வரிதாம்படி செய்து, இவர்கள் நியமநப்படி திருவாராதநங்களை நடத்தி வைத்து வந்தார், அப்போது இவர் ஸந்ததியில் ஒருத்தரும், தேனை மயிலூர் ஸ்ரீ பாஞ்சராத்திரம் பட்டரில் ஒருவருமாக அவ்விடத்திலேயே இருந்து திருவாராதநங்களை செய்து வந்தார்கள். இப்படியே 40 ஸம்வத்ஸரங்களுக்கு மேல் நடந்தது! அப்போது துருக்கருடைய ராஜ்யம் மேன்மேல் வ்ருத்தியாகி வந்தது,

துருக்கரும் காஞ்சீபுரம் வந்து சுவர்ணமயமாயிருந்த ஸ்ரீ புண்ய கோடி விமாநத்தையும், கல்யாண கோடி விமாநகவசங்களையும் அபஹரித்து, மண்டபப்ராகார கோபுரங்களை சின்ன பின்னங்களாக்கி, திருப்புளியடியையும், பெரிய கச்சியிலுள்ள, பேரருளாளன் கங்கை கொண்டான் மண்டபத்தையும், கைவசப்படுத்திக் கொண்டார்கள்.

வெகு காலத்திற்குப் பின் இந்த உபத்திரவம் கொஞ்சம் அடங்கியது. அப்போது பெரிய பெருமாளை சேமித்துவைத்த பெரியோர்களும் தன்னடிச்சோதியை அலங்கரித்தார்கள், வெகு காலமாய் விட்டபடியால் இச் செய்தியறிந்தார் ஒருவரும் இல்லாதேயாயிற்று. நாற்பது வருஷங்களுக்கு அதிகம் இந்த திவ்யதேசம், பெருமாள் இல்லாதே பாழாய்க்கிடந்தது அப்போது வேங்கடவரததாத தேசிகன் திருக்குமாரரி லொருவ ர்திருமலை தாதாசார்யர் என்பவர் வாசாலகராயும் ப்ரம்ஹ்கராயும், இருந்தார். அவருக்குப் பெருமாளை எழுந்தருளிப்பண்ணி முன்போல் திருவாராதநங்களை நடத்த வேணுமென்று விருப்ப முண்டாயிற்று. எவ்வளவு ப்ரயத்நம் செய்தும் பெரிய பெருமாள் எழுந்தருளி இருக்கும் இடம் தெரியவில்லை. அந்த ஜமீன்தாரனும் எவ்வளவு அநுவர்த்தித்த போதிலும் பெருமாளைத் திருப்பிக் கொடுக்க ஸம்மதிக்கவில்லை. அந்த ஸ்வாமியும் வேறுகதியில்லாதவராய் வேறு திருக்கோலங்கள் உகந்தருளப் பண்ணுவதாய் உத்யோகித்து, இது புதிய ப்ரதிஷ்டையாலே பெரிய பெருமாள் திருமேனி வேறு திரவ்யத்திலாவாமென்று கருதி, சீவரம் அக்கிரஹாரத்தார் உதவியைக் கொண்டு அவ்வூர் மலை உச்சியிலேயே சிலையாலே பெரிய பெருமாளையும் நாச்சிமாரையும் உகந்தருளப் பண்ணிவைத்தார். அப்படியே உத்ஸவர் திருமேனியையும் உகந்தருளப்பண்ணினர்.

அப்போது, லாலா தொண்டரமல்லன் என்ற ஜமீன்தார் பலாட்யனுய் துருக்கருக்கு சேனுதிபதியாயிருந்து ஸ்ரீவைஷ்ண ஸம்ப்ரதாயத்தில் நோக்கமுள்ளவனுய், திருப்பதிக்கருகில் வசித்துக் கொண்டு, பெரிய ஜீயரிடத்தில் நல்வார்த்தை கேட்டு வந்தான். திருமலை தாதாசார்யரும் இந்த விருத்தாந்த மறிந்து அந்த பெரிய ஜீயரிடம் சென்று அநுவர்த்தித்து தான் வந்த கார்யத்தை தெரிவிக்க, அவரும் உகந்து, இதொரு பெரிய கைங்கர்யமென்று எண்ணி, தொண்டரமல்லனை வரவழைத்து, எப்படியாவது இவர் திருவுள்ளத்தை நிறைவேற்ற வேணும் என்று நிர்பந்திக்க அவனுமிசைந்து ஹைதராபாத் நபாபு பரமானு என்று கல்பித்து, தன் பிருதிகளோடு உடையார் பாளையம் சென்று, ஜமீன்தாருக்குக் காட்டி பெருமாளை எழுந்தருளப் பண்ணிக் கொடுக்கும்படி கேழ்க்க, அவனுமிசைந்து கொடுக்க, நடுவே ஆர்க்காடு நபாபு இச்செய்தியறிந்து, இவர்களை ஹிம்ஸிப்பதாக நிச்சயித்து, சைன்யங்களை அங்கங்கே நிறுத்தின போது, இவர்கள் ஒன்றும் செய்யத் தோன்ருமல் ஒளித்திருந்து, ஒரு காலத்தில் எல்லாரும் ஒன்று சேர்ந்து, நாம் எல்லாரும் தனித்தனியே இருந்து. 'அடோ பய்யா' என்று சப்தம் சொன்னல் ஒத்தைத் திருச்சின்னம் ஊதவேண்டியது, உடனே எல்லாரும் ஒன்று சேரவேண்டியது, முன்னே ஒரு நெருப்புச் சட்டியும் பின்னே அழுகையுமாய் நடுவில் சவம் போலே பெருமாளை ஆசந்தியில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு காடு தாண்டவேணும் இப்படி வந்தால்தான் நடுவில் துருக்கர் தொந்தரவு இல்லாமல் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு போகலாம் என்றும் நிச்சயித்து, ஸங்கேதப்படியே தொண்டரமல்ல ஜமீன்தார் ஸஹாயத்தால் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வந்து திருவத்திமாமலையிலே சேர்த்தார்கள். இப்படி எழுந்தருளப்பண்ணின காலம், சாலீவாஹநசகாப்த மானத்தால் இத்தனுவது வருஷம் என்று தெரியவில்லை. ஆனுல் ஏதோ ஒரு விரோதி நாம ஸம்வத்ஸரம் பால்கு நமாஸம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் சனிவாரம் அமாவாஸ்யைதிதி விருஷபலக்னம் என்று சிலாசாஸநத்தால் தெரிகிறது. இந்த சிலாசாஸநம் பெருந்தேவித்தாயார் ஸன்னதி வடவண்டைத் திருமுத்தத்திலிருக்கும் குத்துக்கல்லில் தெலுங்கு லிபியில் இருக்கிறது இப்போதும் எல்லாரும் பார்க்கலாம்.

மேற் சொன்ன ஐதிஹ்யத்திற்கு அறிகுறியாக நாளைக்கும் இந்த ஸந்நிதியில் பங்குனி உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் அந்த ஜமீனிலிருந்து பிரதிவருஷமும் நூறு ரூபாய்களுக்கு மேல் சிலவு செய்து விசேஷமாக ஒரு உத்ஸவத்தை நடத்தி வருகிருர்கள். அந்த திருமலை தாதாசார்யர் உத்ஸவத்திருமேனி கிடைத்து விட்டபடியால் தாமுகந்தருளப்பண்ணின விக்ரஹத்தை ஸந்நிதியிலேயே சேமப்படுத்தி, திருமஞ்சனத் திருமே-

னியான மூல பேரத்தை, தேனேமயிலூர் பட்டரைக் கொண்டு ஸ்ரீ பாஞ்ச ராத்திர சாஸ்திரப்படிக்கு திருவாராதநாதிகளை நடத்தி வந்தார். மூல பேரத்திற்கு நாச்சிமார்கள் முன்னிருந்ததில்லை என்று தெரிந்து கொண்டு, நாச்சிமார்களை சிவரத்து மலேயில்தானே நிறுத்திவைத்தார். ஆகையால் இப்போது திருவத்திமா மலேயில் எழுந்தருளி இருக்கும் த்ருவபேரம் நவீநம். அதாவது 157 வருஷங்களுக்கு முன் ப்லவவருஷத்திற்கு முந்தின விரோதி வருஷத்தில் எருந்தருளினவர் என்று கொள்ளலாம் அதற்கு முன்னெழுந்தருளி இருந்த திருமேனி இப்போது அனந்த ஸரஸ்விலிருந்து வெளியேறி ஸேவைஸாதிக்கும் தாருமயமான திருமேனியே என்பதில் ஸம்சயம் இல்லே. இப்படி இருக்க சிலர், இந்த ப்ராசீந பெருமாளுக்கு நடக்கும் மஹோத்ஸவத்தில் அசூயை கொண்டு, இத்திருமேனியைப் பற்றி வாயால் அநுவதிப்பதற்குக் கூடத்தகாத சிவ தூஷண வார்த்தைகளேச் சொல்லி சென்னே முதலான விடங்களில் உபந்யஸிப்பதாகக் கேள்விப்படுகிறோம். அவைகளே ப்ராமாணிகர்கள் செவியுத்துக் கேழ்க்கலாகாது. இந்த திருமேனியில் ஒருவிதமான அவத்யமும் இல்லே. அப்படி அங்கபங்கம் நேரிட்டாலும் அதை ஸந்தாநம் செய்து ஆராதிக்க வேணுமே ஒழிய அந்த திருமேனியை உபேக்ஷிக்கக் கூடாதென்று ஸ்ரீபாஞ்சராத்திராதி ஆகமங்கள் விதிக்கின்றன. ஸந்தாநம் செய்யக்கூடாத நிலேமையில் பங்கம் ஏற்பட்டால் ஒருவருக்கும் தெரியவொட்டாமல் மறைத்து விடவேணும். என்று சாஸ்திரங்களில் விதி. அப்படி மறைத்ததை சிலா சாஸநம் இட்டிருப்பது தகாது.

ஆகையால் இப்போது ஆச்சர்யமான திவ்யசௌந்தர்யத்தோடு சேவை ஸாதிக்கும் தாருமயமான பெருமாள் திருமேனியில் வேறுவிதமான அதிசங்கை செய்வதற்கு இடமில்லே. ஆழ்வார்களும், ஸ்ரீமன் நாதமுனிகளும் இராமாநுசன், ஸ்ரீ தேசிகன் உள்ளிட்ட மற்ற ஆசார்யர்கள் அனேவரும் மங்களசாஸநம் செய்து அநுபவித்த திருமேனிதான் தீர்த்தத்தில் எழுந்தருளி இருப்பதால் திருவநந்தாழ்வானே நித்யாராதநம் செய்தருளுவதாக பெரியோர்களின் கொள்கை, இதைப்பற்றி தூஷிப்பது மஹாபசாரமாகும்.